DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 150/2024 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| Name | : | **ஜோபின்** |
| Father's Name | : | ஜேக்கப் ஜெயபாரி |
| Village | : | கல்லுவழி |
| Taluk | : | காளையார்கோவில் |
| Calling | : | - |
| Age | : | 12/2025 |

**(வழக்கின் 1வது சிறையில் உள்ளார். 3ம் எதிரி ஆஜர். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 15.05.2025

(எனது பெயர் ஜோபின் நான் தற்போது எங்கு உள்ளேன் என்றால் நீதிமன்றத்தில் உள்ளேன். நான் தற்போது கல்லுவழியில் 7ம் வகுப்பு படித்து வருகிறேன். நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். என்னால் கேள்விகளை புரிந்துகொண்டு பதில் சொல்ல தெரியும். )
எனவே சாட்சி சாட்சியம் அளிக்க தகுதியானவர் என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது நான் கல்லுவழியில் குடியிருந்து வருகிறேன். நான் கல்லுவழியில் ஜான்போஸ்கோ பள்ளியில் 7ம் வகுப்புபடித்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 எனது அத்தை மற்றும் மாமா ஆவார். அ.சா.3 வேதபோதக அரசி எனது அம்மா. சாட்சி ஜெர்லின் எனது அக்கா. சாட்சிகள் உபகாரமேரி, சின்னப்பன் ஆகியோர் எனது தாத்தா, பாட்டி ஆவார். சாட்சி இந்துமதி என்பவரை எனக்கு தெரியும் எனது பக்கத்து வீட்டில் குடியிருந்து வருகிறார். வழக்கின் எதிரிகளை

என்னால் பார்த்தால் அடையாளம் சொல்ல இயலும். எனது அம்மா வேதபோதக அரசி ஆண்டிச்சியூரணியில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்த்து வருகிறார். இவ்வழக்கு சம்பவகாலத்தில் நான் கல்லுவழியில் 5 ம் வகுப்பு படித்து வந்தேன். கடந்த 25.01.2024 ம் தேதி மாலை எனது அத்தை, மாமா எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார்கள். எங்களை பார்த்துவிட்டு அன்றைய தினம் 9.30 மணியளவில் காளையார்கோவில் உள்ள அவர்களின் வீ.ட்டிற்கு சென்றார்கள். பின்பு அன்றைய தினம் இரவு 10.30 மணியளவில் நான், எனது அக்கா, எனது அம்மா, எனது தாத்தா, பாட்டி ஆகியோர் சாப்பிட்டுவிட்டு வீட்டை தாழ்ப்பாள் போட்டுவிட்டு படுக்க சென்றுவிட்டோம். நானும், எனது அக்கா, எனது பாட்டியும் வீட்டிலிருந்து ஹாலில் படித்திருந்தோம், எனது அம்மா வீட்டிலிருந்த ஒரு ரூமில் படித்திருந்தார்கள். இரவு 2.00 மணியளவில் எனது பாட்டி பாத்ரூம் செல்வதற்காக சென்றார்கள். வழக்கமாக பாத்ரூம் வீட்டிற்கு வெளியே தான் செல்வார்கள். எனது பாட்டி பாத்ரூம் சென்றுவிட்டு சைடு கேட்டை மூடாமல் அப்படியே வந்து விட்டார். வீட்டு கதவையும் சாத்தவில்லை. அதன்பிறகு இரவு 2.00 மணியளவில் ஒரு நபர் எங்கள் வீட்டிற்குள் வந்து எனது அக்காவை கம்பி மற்றும் கட்டையால் அடித்தார். அதில் எனது அக்காவிற்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது பாட்டியையும் கம்பியால் தலையில் அடித்தார். எனது பாட்டியின் அலறல் சத்தம் கேட்டு நான் எழுந்து பார்த்தபோது என்னையும் அந்த நபர் எனது தலையில் கம்பியால் அடித்தார். நான் கத்தும் சத்தம் கேட்டு எனது அம்மா ரூமிலிருந்து வந்தார்கள். என் அம்மாவையும் அந்த நபர் கம்பியால் அடிக்கும் போது எனது அம்மா கையால் தடுத்தார். அதில் எனது அம்மாவிற்கு கையிலும், தலையிலும் காயம் ஏற்பட்டது. நாங்கள் 5 பேரும் கத்தியவுடன் அந்த நபர் வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டேன். மறு நாள் 26.01.2024 ம் காலை 7.30 மணியளவில் எனக்கு மயக்கம் தெளிந்து எனது பாட்டியின் செல்போனை எடுத்து எனது அத்தை மற்றும் மாமாவிற்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். பின்பு எனது வீட்டிற்கு அருகில் இருந்த இந்துமதி என்பவர் வீ,ட்டிற்கு சென்று அவரது மகளிடம் இன்று கொடியேற்றுவதற்கு நான் பள்ளிக்கூடம் வரவில்லை என்று சொன்னேன். இந்துமதி என்னிடம் தலையில் ஏன் ரத்தமாக இருக்கிறது என்று கேட்டார் நான் அவரிடம் இரவு

2.00 மணியளவில் ஒருநபர் வந்து எங்களை அடித்துவிட்டதாக சொன்னேன். அதன்பிறகு ஆரோக்கியமேரி, மரியம்மாள், சாந்தி, இந்துமதி ஆகியோர் வந்து எங்களை பார்த்தார்கள். எனது அத்தையும் மாமாவும் எங்களது வீட்டிற்கு வந்துவிட்டார்கள். எனது அத்தையும் மாமாவும் வீட்டிற்குள்சென்று பார்த்தபோது கபோர்டு உடைக்கப்பட்டிருந்தது. நகை பாக்ஸ்கள் எல்லாம் சிதறிகிடந்தன. எனது அத்தையும் மாமாவும் ஆம்புலன்சு மூலமாக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள். அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக வேலம்மாள் தனியார் மருத்துவமனைக்கு சேர்ந்தோம். நான் மருத்துவமனையில் சுமார் 2 மாதம் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை எடுத்து'க்கொண்டேன். ஆஜர் எதிரி தினேஸ்குமார் என்பவர்தான் எங்கள் வீட்டிற்கு வந்து என்னையும், எனது வீட்டில் உள்ளவர்களையும் தாக்கி அந்த ஒரு நபர் ஆவார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது பாட்டி பாத்ரூம் சென்றது எனக்கு தெரியாது அப்போது நான் துாங்கிகொண்டிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தபோது ஒரு நபர் வந்ததாக தான் சொன்னேன் நிறைய நபர் வந்ததாக சொல்லவில்லை. என்னை அடித்த நபரை காவல்நியைலத்தில் வைத்.துதான் அடையாளம் காண்பித்தேன். எனது அக்காவையும், பாட்டியையும் அடித்ததை நான் நேரில் பார்த்தேன். அடித்தவர் கம்பியும் கட்டையும் வைத்திருந்தார். என்னை அடித்த அரை மணி நேரம் கழித்து தான் எனக்க மயக்கம் ஏற்பட்டது. நாங்கள் சத்தம் செய்தது பக்கத்து வீட்டுக்கு கேட்கவில்லை. எனக்கு காயம் ஏற்பட்டதை மறுநாள் காலை 7.00 மணிக்கு நான் இந்துமதி வீட்டிற்கு சென்று விபரம் சொன்னபிறகு தான் சாட்சிகள் ஆரோக்கியமேரி, மரியம்மாள், சாந்தி, இந்துமதி ஆகியோர்களுக்கு தெரியும். அதன்பின்பு தான் எங்கள் வீட்டிற்கு வந்தபின்பு தான் எனது மாமாவும் அத்தையும் வந்தார்கள். எனது அத்தையும் மாமாவும் வந்தபிறகு தான் ஆம்புலன்சு வந்தது ஆம்புலன்ஸ் சுமார் காலை 8.00 மணிக்கு வந்தது. 1வது எதிரியை முதன்முதலாக நான் காவல்நிலையத்தில் வைத்து தான் பார்த்தேன். காவல்நிலையத்தில் வைத்து நான்தான் அடையாளம்

காண்பித்தேன். எதிரியுடன் மற்றொரு நபரும் இருந்தார். நான் காவல்ஆய்வாளர் ஆடிவேல் என்பவரிடம் அடையாளம் காண்பித்தேன். நான் காவல்துறையினர் சொன்னதன் பேரில் சாட்சி சொல்லவில்லை நடந்ததன் பேரில் சொன்னேன். நடந்த விபரம் எனக்கு எதுவும் தெரியாது என்றும் காவல்துறை சொன்னதன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2, 3ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை எனக் கூற பதிவு செய்யப்பட்டது.**

**மறு விசாரணை:** இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.05.15 12:34:54 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.